DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **CC. NO.153/2022**
Preliminary Register
Sessions
Deposition of witness for Prosecution அ.சா.2
Defence
Court

Name : நவமணி
Father/ Husband Name : இளங்கோ
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

எதிரி ஆஜர்.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of **10.07.2023**

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

நான் தேவகோட்டையில் குடியிருந்து வருகிறேன். பாஸ்புட் வண்டிக்கடையில் வைத்து நடத்தி வருகிறேன். நானும், ரவி என்பவரும் இருசக்கர வாகனத்தில் ஒரு நபரை பார்ப்பதற்காக போய் கொண்டிருந்தோம். அப்போது உடைக்கும் சத்தம் கேட்டு திரும்பி பார்த்தோம். அதன் பின்னர் எனது மாமா துரைராஜீக்கு போன் செய்தேன். அவர் வந்து எனது தம்பி மாந்தோப்பில் வைத்துள்ள வீட்டை பார்த்தார். அப்போது எதிரி அ.சா.1யும், என்னையும் போட்டோ எடுத்தார். அப்போது அ.சா.1என்னை எதற்கு போட்டோ எடுக்கிறீர் என்று கேட்டேன். எதிரி அருவாளை எடுத்து கிழட்டு பயலே, மானங்கெட்டவனே என அசிங்கமாக பேசினார். அதன் பின்னர் அருவாளை எடுத்து அ.சா.1 தலையை நோக்கி ஓங்கினார். நான் அ.சா.1ஐ கூட்டிக்கொண்டு வந்துவிட்டேன். நானும் காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றேன். அ.சா.1 புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. சாட்சி மீண்டும் மாற்றி போலீசார் என்னை விசாரித்ததாக சாட்சியம் அளிக்கிறார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. எதிரிக்கும், அ.சா.1க்கும் வாடகை கொடுப்பது சம்மந்தமாக தான் பிரச்சனை என்று சொன்னால் அந்த பிரச்சனையும் இருக்கிறது. எதிரியை வீட்டை காலி பண்ண சொல்லி நானும் பல முறை சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். நானும், அ.சா.1ம் எதிரியை சட்ட விரோதமாக அவர் குடியிருக்கும் வீட்டை காலி செய்ய சொல்லி மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் உரிமையியில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். அதன் பிறகு தான் இந்த வழக்கில் புகார் அ.சா.1 கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. அதற்கு முன்பே இந்த பிரச்சனை ஏற்பட்டுவிட்டது. நான் எதிரி குடியிருக்கும் வீட்டின் உரிமையாளரா என்றால் இல்லை. நான் தான் வாடகைக்கு பேசி குடியமர்த்தினேன்.

2. நான் போலீசார் விசாரணையில் எதிரி என் வீட்டிற்கு குடியிருந்து வருவதாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை. ரவி எனது உறவினர் என்றால் சரியல்ல. தெரிந்த நபர். நான் யாரை பார்ப்பதற்காக ரவியுடன் சென்றேன் என்றால் ராமச்சந்திரன் என்பவரை பார்க்க சென்றேன். ராமச்சந்திரனை நான் பார்க்க செல்லும் போது அவர் வீட்டில் இல்லை. நான் சொல்வது போல் ராமச்சந்திரன் வீடு எதிரி குடியிருக்கும் வீட்டின் முன்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் வீட்டு முன்பு சிவகாமி என்பவரின் வீடு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. ராமச்சந்திரன் என்பவர் சிவகாமியின் மூத்த மகன் ஆவார்.

3. நான் அ.சா.1க்கு போன் செய்யும் போது எத்தனை மணி இருக்கும் என்றால் பகல் 12.45 மணி இருக்கும். எதிரி வீட்டை சுற்றி காம்பவுண்ட் உள்ளது என்று சொன்னால் சரிதான். கலைச்செல்வி என்பவர் துரைராஜின் மகள் என்றால் சரியல்ல. மகள் முறை உள்ள மூன்றாவது பங்காளி ஆவார். நான் சொல்வது போல் எதிரி எதையும் உடைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1ஐ அருவாளை வைத்து எதிரி ஓங்கவில்லை என்றும் அசிங்கமாக பேசவில்லை என்றும் நான் சொல்வது போல் எந்த ஒரு சம்பவமும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் எதிரியின் வீட்டை காலி செய்ய வேண்டும் என்பதற்காக அ.சா.1க்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி வாடகை கொடுக்க தயாராக உள்ளார் என்றும் நாங்கள் தான் வீட்டை காலி செய்ய பல்வேறு வழக்குகள் தொடுத்துள்ளோம் என்று சொன்னால்

சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.